மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இம்மாதிரித் திட்டங்களுக்கு அன்னிய செலாவணி பெரிதும் தேவைப்படுகிறது. முதல் கட்ட வேலைக்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இரண்டாம் கட்ட வேலைக்கு 15.36 கோடி ரூபாய் அனுமதித்திருக்கிறார்கள். மேலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் தான் 1974-ல் முடிய வேண்டிய வேலை 1975-ல் முடிகின்ற நிலையில் இருக்கிறது. இன்னும் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, நமது மாநிலத்திற்கே மின்சாரப் பற்றுக்குறை இருக்கும்போது கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் மற்ற மாநிலங்களும் உரிமைக் கொண்டாடுகின்றனவே, அவர்கள் எந்த அடிப்படையில் இத் திட்டத்தில் உரிமை கொண்டாடுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, முதல் பிரிவில் தயாராகும் மின்சாரத்தை தமிழகம் பயன்படுத்திக்கொள்ளும். இரண்டாவது பிரிவில் உற்பத்தியாகும் மின்சாரத்தை ஆந்திர அரசாங்கம் வேண்டுமென்று கேட்கிறது. தமிழகத்திற்கு தேவையானது போக, உபரி இருந்தால் கொடுப்பதாக நாம் தெரிவித்திருக்கிறோம்.

ஜீப் பேருந்துகள்

*99 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கிராமச் சாலைகளில் ஜீப் பஸ்கள் ஓட அனுமதி வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது அத்தகைய செயற்குறிப்புகள் எதுவும் அரசிடம் முடிவுறு நிலையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தற்போது கிராமப்புறச் சாலைகளில் எத்தனை ஜீப் பஸ்கள் ஓடுகின்றன என்பதையும் இன்னும் எத்தனை ஜீப் பஸ்கள் விடப்பட இருக்கின்றன என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏற்கெனவே 12 வழித் தடங்களில் 14 ஜீப் பஸ்கள் ஓடுகின்றன. அது மட்டுமல்ல. மேலும் 16 வழித்தடங்களில் ஜீப் பேருந்துகள் விடும் செயற்குறிப்புகள் தொடர்புடைய வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளிடம் முடிவு பெறுமல் உள்ளன.

1972 டிசம்பர் 8]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இத்தகைய ஜீப் பஸ்கள் ஓடுகின்றனவா? இல்லை என்றால் அதற்கு ஏதாவது அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் இனிமேலாவது அனுமதி வழங்கு வதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஜீப் பஸ்கள் விடுவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. பொதுவாக ஜீப் பஸ்கள் மலைப்பாங்கான இடங்களில் ஓடுவதற்குத்தான் அனுமதி அளிக்கப் படுகிறது. தஞ்சை மாவட்டம் மலைப்பாங்கான இடம் அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த மினி பஸ்களுக்கு புதிதாக பெர்மிட் வழங்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா என்ற விபரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த மினி பஸ்களை அரசாங்கப் போக்குவரத்து நிறுவனங்கள் மூலம் ஊராட்சி ஒன்றியங் களில் நடத்தும் ஒரு யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். தேவேந்திரன் : தலைவரவர்களே, மினி பஸ்களை அரசாங்கம் நடத்த உத்தேசித்திருப்பதாகச் சொன்னார்கள். அதைப் போலவே ஜீப் பஸ்களை யும் அரசாங்கமே நடத்துமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஜீப் பஸ்களை விடு வதிலும், மினி பஸ்களை விடுவதிலும் என்ன வேறுபாடு இருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கவில்லை. பொதுவாக இப்படிப்பட்ட பஸ்கள் குறுகலான சாலைகளில் விடப்படுகின்றன. மினி பஸ்களை விட ஜீப் கார்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அதனால் சிறிய சாலைகளில் மினி பஸ்களை விடுவது பொருத்தமாக இருக்கும் என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. கு. பொம்மன் : தலைவரவர்களே, மலைப்பாங்கானப் பகுதிகளில்தான் ஜீப் பஸ்கள் விடப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நீலகிரி மாவட்டம் மலைப்பாங்கான பகுதியாக இருப்பதால் அங்கு அதிகமாக ஜீப் கார்கள் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத் திலே ஜீப் பஸ்கள் என்ற வகையில் இப்போது விடப்படவில்லை. ஆனால் அங்கே ஜீப்கள் டாக்சிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, என்னுடைய தொகுதியாகிய ஆண்டிப்பட்டியில் வரிசைநாடு பகுதி மலைப்பாங்கான பகுதியாக இருப்பதால், அங்கு ஜீப் பஸ்கள் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : தலைவரவர்களே, அது ஜீப் பஸ்கள் விடுவதற்குத் தகுதியான இடமாக இருந்தால் அரசாங்கம் அதைப் பரிசிலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மலைப் பாங்கான இடமாக தஞ்சை மாவட்டம் இல்லை என்று சொன்னார்கள். இருப்பினும் அங்கே மிகக் குறுகிய பாதைகள் ஏராளமாக இருப்பதால், பெரிய பஸ்கள் போவதற்கு வசதி இல்லாமல் இருப்பதால், அப்படிப்பட்ட இடங்களில் ஜீப் பஸ்கள் விடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் ஜீப் பஸ்களுக்குப் பதிலாக மினி பஸ்களே போதுமானது.

அரசு பேருந்துகள்

* 100 வினா.—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசாங்க பஸ்கள் வழியில் பழுதடைந்து விட்டால் தனி மெக்கானிக்குகளைக் கொண்டு அவசர காலங்களுக்கு ரிப்பேர் செய்ய அரசு அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை. ஆயினும், பேருந்துகள் செல்லும்போது வழியில் பழுதடைந்து விட்டால் அவற்றைப் பழுதுப் பார்ப்பதற்காகத் தேவையான தொழில் நுட்பப் பணியாளர்கள், சாதனங்கள் ஆகியவற்றைக் கொண்ட பழுதுபார்க்கும் இயல் ஊர்திகளை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திரு. கே. எ. வகாப் : இப்படி பழுதடைந்த வண்டிகளை ரிப்பேர் செய்வதற்கு அரசாங்கம் தக்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது என்றாலும் அங்கங்கே ரிப்பேர் ஆகிறபோது உடனடியாக தனியார் மெக்கானிக்குகளிடமும் சர்வீஸ் கோரி ரிப்பேர் செய்வதற்கு அனுமதித்தால் வண்டிகள் சரியாகச் செல்வதற்கு வழியேற்படும். இதற்குச் சர்க்கார் அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.